ARTICLE 37 | Research Article – Peer Reviewed | Article ID: TAJP-2026-00085
Vol. 20, No. 01 (October 2026) – Part II | pp. 58–62
Received: 3 October 2026 • Accepted: 3 October 2026

சுசீந்திரம் ஸ்ரீ முன்னூற்றிநங்கை அம்மன் கோவிலின் அமைப்பும் அருள்ச்சிறப்பும்

முனைவர். விஜய சோபா மோ[1,*]

[1]உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, தமிழ்க்கலை ஆய்வகம், தெ. தி.இந்துக்கல்லூரி, நாகர்கோவில் தமிழ்நாடு, இந்தியா., India

***Corresponding author / தொடர்பு ஆசிரியர்:** முனைவர். விஜய சோபா மோ — tamilseminar12@gmail.com
ORCID: முனைவர். விஜய சோபா மோ https://orcid.org/0009-0005-6652-0214

Abstract

The Tamil race is the oldest race in the world. Tamil Nadu is a land filled with temples. Tamil Nadu is the land that is the foundation for spirituality, and where great saints, Siddhas, sages, and yogis were born and lived. In such a uniquely special Tamil Nadu, Kanyakumari district, 5 kilometers to the east of Nagercoil, is situated the Suchindram Sri Munuthitha Nangai Amman Temple. The grace and greatness of the Goddess can be seen in detail in this research.

ஆய்வுச் சுருக்கம்

உலகின் ஆதி இனம் தமிழ் இனம். ஆலயங்கள் நிறைந்த பகுதி தமிழகமே. ஆன்மிகத்திற்கு அடிப்படையாக அமைவதும், பெரியோர்கள் தோன்றியதும் சித்தர்களும், முனிவர்களும், யோகிகளும், வாழ்ந்த நாடு தமிழ்நாடு, அத்தகைய தனி சிறப்பு மிகுந்த தமிழ்நாட்டில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் கிழக்கு முகமாக ஐந்து கிலோ மீட்டர் தொலைவில் சுசீந்திரம் ஸ்ரீ முன்உதித்த நங்கை அம்மன் கோவில் அமைந்துள்ளது, அம்மனின் அருள் தன்மை,சிறப்பையும் இவ்வாய்வில் விரிவாக காணலாம்

Keywords / திறவுச் சொற்கள்: தேவி; காணிக்கை மகிஷாசுரமர்த்தினி; ஆதிபராசக்தி வாடா விளக்கு கற்ப கிரகம்

How to cite / மேற்கோள் காட்டும் முறை: மோ, மு. வி. சோ. (2026). சுசீந்திரம் ஸ்ரீ முன்னூற்றிநங்கை அம்மன் கோவிலின் அமைப்பும் அருள்ச்சிறப்பும். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01), Volume 2, –.

சுசீந்திரம் பெயர் விளக்கம்

ஞானாரண்யம் என்ற பெயரால் வழங்கி வந்த இடமே காலப்போக்கில் இந்திரன் சாபம் நீங்கியதால் சுசீந்திரம் என வழங்கல் ஆயிற்று, சுசி என்றால் மன்னித்தல், இந்திரம் என்பது இந்திரனுக்கு மன்னிப்பு அருளிய இடம் சுசீந்திரம். ஊரின் வடக்கு பகுதியில் பாய்ந்து வளம் கொழிக்கும் பஃறுழியாறு ஆறு சங்க கால புறநானூற்றில் இடம்பெற்றுள்ளது, தற்பொழுது பழையாறு எனவும் அழைக்கப்படுகிறது, பழமையான பொன் நகரமான சுசிந்தை சிறப்பை எல்லாம் இன்னொரு நாவால் எடுத்தியம்பை இயலாது. என்பது கவிமணியின் வாக்கு அப்படிப்பட்ட சிறப்புடைய ஊரே சுசிந்தை பதியாகும்.

முன்னுரை

சங்க காலத்துக்கு முந்தைய காலத்திலேயே தமிழ்நாட்டில் கோவில்கள் இருந்திருக்கின்றன. பண்டைய தமிழர்கள் நிலத்தை ஐவகையாக பிரித்து ஒவ்வொன்றிற்கும் தனித்தனி தெய்வங்களை படைத்துக் காட்டினார்

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

மாயோன் மேய காடுறை உலகமும்
(தொல்:பொருள் :அகம்)

எந்த தொல்காப்பிய நூற்பாவால் இவ்உண்மையை அறியலாம். வடக்கே இமயத்தில் இருந்து தென்குமரி வரை பறந்து கிடக்கின்ற நமது பாரத திருநாட்டில் ஊருக்கு ஒரு கோவில் என்று ஆங்காங்கே அமைந்திருப்பதை ,தீர்த்த யாத்திரைக்காக சென்று வருவார்கள் பார்த்து மகிழ்ந்து வணங்கி வருவதை அறிகிறோம் உலகில் எல்லா கோவில்களும் ஒன்று போல் அமைவதில்லை கோவிலின் அமைப்பு நாட்டுக்கு நாடு மாநிலத்திற்கு மாநிலம் இடத்திற்கு இடம் மதத்துக்கு மதம் வேறுபடுகிறது. சுசீந்திரம் ஸ்ரீ முன்னுதித்த அம்மன் கோவிலின் அமைப்பும் அறச்சிறப்பும் குறித்து ஆராய்வோம்.

கோவில் விளக்கம்

இறைவனை பண்டைத் தமிழ் மக்கள்' கோ 'என்று அழைத்தனர் மக்கள் உறையும் இடம் 'இல்'என்று அழைக்கப்பட்டது. எனவே இறைவன் உறையும் இடம் கோவில் என வழங்கலாயிற்று.

(கலைக்களஞ்சியம் தொகுதி 4 பக்கம் 34)

கோவில்கள் மனிதனின் வழிபாட்டிடமாக இருப்பதோடு சிற்பம்!, ஓவியம் ,இசை, நாட்டியம்முதலிய கலைகளில் வளர்ப்பு பண்ணையாகவும் இருந்து வருகின்றனர். மனம் ஒன்றி வழிபடும் இடம் ஆத்ம சக்திக்கு உந்துதலாகவும் கோவில் அமைகின்றது.

கோவில் அமைவிடம்

சுசீந்திரம் ஸ்ரீ 3 முன்னுதித்த நங்கை அம்மன் கோவில் நாகர்கோவிலில் இருந்து ஆறு கிலோமீட்டர் தொலைவில் கன்னியாகுமாரி செல்லும் வழியில் பழையாற்றின் கரையில் சோலைகளும் வயல்களும் சூழ அமைக்கப்பட்டுள்ளது .தெற்கு முகமாக திருக்கோவில் வாசல் அமைந்துள்ளது மகிஷாசுரமர்த்தினி அவதாரத்தில் அம்மன் கற்ப கரகத்தில் கிழக்கு முகமாக காட்சி தருகின்றாள் 5 அடி உயரத்தில் அருள் பாலிக்கின்றாள்.

பெயர் அமைப்பு
முன் உதித்த நங்கையே போற்றி !என்னுள் உதித்த நங்கையே போற்றி!

என்ற ஆன்றோர் வாக்கு மூலம் முக்கோடி தேவர்களுக்கும் முந்நூறு தேவியாக காட்சியளித்ததால் முன்னூற்றிநங்கை என்றும் முனனூதித்த நங்கை என்றும் அழைப்பதாக தெரிகிறது.

அமைப்பு

கர்ப்பக்கிரகம்,
வழிபாட்டு மண்டபம்,
அர்த்தமண்டபம் என மூன்றாக அமைப்பு பிரிக்கப்படுகிறது.

கர்ப்பக்கிரகம் வரிக்கல்லால் கட்டப்பட்டுள்ளது கர்ப்ப கிரகத்தில் அம்மன் மகிஷாசுர மர்த்தினி அவதாரத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.திருவுருவச் சிலையின் இருபுறமும் நான்கு சங்கலி விளக்குகள் அமைக்கப்பட்டுள்ளன. திருவுருவத்தில் அங்கியும் அமைக்கப்பட்டு உள்ளது. முன்புறமாக அமைந்துள்ள அம்மன் இடத்தில் வாடா விளக்கு அமைக்கப்பட்டு தினமும் கோவில் நடை திறந்தவுடன் விளக்கேற்றி வைக்கப்பட்டு வருகிறது. வழிபாட்டு மண்டபத்தின் நேராக

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

இரண்டடி உயரமுள்ள பீடத்தின் மேல் வேதாளம் சிலை உள்ளது. ஓரே நேரத்தில் நூறு பேர் உட்காரும் வகையில் வழிபாட்டு மண்டபம் அமைந்துள்ளது. அர்த்தமண்டபம் கர்ப்ப கிரகத்தை தொட்டு தெற்கு புறமாக அமைக்கப்பட்டுள்ளது. இதன் கன்னி மூலையில் விநாயகர் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது.

பிரகாரம்

பிரசித்தி பெற்ற சிறிய கோவில் மக்கள் சுற்றி வழிபடுவதற்கு உட்பிரகாரம், வெளிப்பிரகாரம் உண்டு.

கோவிலின் வடிவம்

நீள் சதுர வடிவத்தில் அமைந்த வடிவமுடையதாகும். கிழக்கு மதிற் சுவரில் ஒரு வாயிலும் வடக்கு மதிற்சுவரில் ஒரு வாயிலும் அமைக்கப்பட்டுள்ளது. ஓரே நேரத்தில் நூறு பேர் அம்மனை தரிசிக்கலாம்.

துணைக்கோவில்கள்

இந்து சமய கடவுளர்களுக்கென்று தனித்தனியாக கட்டப்பட்ட கோவில்கள் அனைத்திலும் விநாயகருக்கு இடம் அளிக்கப்பட்டு வருகிறது. நாகராஜா கோவில் ,ஐயப்பன் சுவாமி கோவில், சிவன், பார்வதி, சப்த கன்னிகர் வன்னியர், வன்னிச்சி, கருமாரியம்மன் போன்ற கோவிலும் காணப்படுகின்றன.

நாகராஜா கோவில் பக்கம் ஒரு அரசமரம் உள்ளது. அரச மரத்துக்கு இடி விழுந்தால் தாங்கிக் கொள்ளுகின்ற சக்தி உண்டு என்பர். கோவிலின் பின்பக்கம் ஒரு கிணறு உள்ளது. கோவிலுக்கு வேண்டிய தண்ணீர் அக்கிணற்றில் இருந்து எடுக்கப்படுகிறது. ஆடிச் செவ்வாய் நாட்களில் சுமார் ஐந்நூறுக்கும் மேற்பட்ட மக்கள் கோவிலை தரிசிக்க வருவார்கள்.

மடப்பள்ளி

கோவிலின் இடதுபுறம் ஒரு அறை இங்கு நெய்வேத்தியத்துக்கு தேவையான பொருட்கள் வைக்கப்பட்டுள்ளது. மேலும் வழிபாடு (பொங்கல், கடலை, பஞ்சாமிர்தம், புடமிர்தம், பால்பாயசம், அப்பம்) செய்வதற்கு அங்கு அடுப்பும் உண்டு. கோவிலில் பூஜை செய்யும் அர்ச்சகர்கள் இங்கு வந்து நெய்வேத்தியத்திற்கான நெய்வேத்திய உணவை தாங்களே படைத்து இறைவிக்கு சமர்ப்பிப்பார்கள். மேலும் யாராவது வழிபாடு செய்வதற்கு வந்தால் இம்மட பள்ளியில் உள்ள அறையில் சமைத்து இறைவிக்கு நெய்வேத்திய பிரசாதம் வழங்குவார்கள்.

மதில் சுவர்

எட்டடி உயரம் வரிக் கல்லால் கட்டப்பட்டு காவி வண்ணம் பூசப்பட்டு மிக தத்துருவமாக காட்சியளிக்கிறது.

அர்ச்சகர்

சல்லி ராயர் என்ற புரோகிதர் குடும்ப பாரம்பரிய முறையில் காலம் காலமாக இக்கோவிலில் பூஜைகள் நடத்தி வருகிறார்கள். தற்பொழுது நிர்வாகம் இவர்களுக்கு போதுமான அளவு ஊதியமும் வழங்குகிறது.

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

தல வரலாறு

இந்திரன் சாபம் நீங்க வேள்வி வளர்க்க வேண்டும். வேள்வியில் முனிவர்கள் மந்திரம் ஓதினர். ஆனால் மும்மூர்த்திகள் தோன்றவில்லை. கடைசியாக முனிவர்கள் ஆதிபராசக்தியை நினைத்து வழிபட்டார்கள். மும்மூர்த்திகள் தோன்றினர். அவ்வாறு இந்திரனுடைய சாபம் தீர்க்க முனைந்தனர். அந்த இடத்தில் தோன்றிய ஆதிபராசக்தியே முன்னூதித்த நங்கை அம்மன் ஆவார். குளத்தங்கரையில் அரசமரம் நடுவில் தேவி தோன்றினாள். இன்றும் அவ்வாறு பக்தர்களுக்கு அருள் பாலிக்கின்றாள்.

நடைபெறும் பூஜைகள்

தினந்தோறும் காலையில் 5 மணிக்கு நடை திறக்கப்படுகிறது. மதியம் பன்னிரண்டு மணிக்கு நடை சாத்தப்படுகிறது. பின்பு மாலை ஐந்துமணி முதல் எட்டு மணிவரை வழிபாடுகள் தினந்தோறும் நடந்து வருகின்றன. வெளியூரிலிருந்து ஏராளமான மக்கள் அன்னையின் அருள் பெற்று செல்கின்றனர். தூர் சக்திகளை கட்டுப்படுத்தும் சக்தி முனனூதித்த நங்கை அம்மனுக்கு உண்டு.

திருவிழா

சுசீந்திரம் தாணுமாலையன் திருக்கோவில் பத்து நாட்கள் வருடம் தோறும் சித்திரை, ஆவணி, மார்கழி மாதங்களில் நடைபெறும் திருவிழாவில் 'அழகிய நாச்சியார்' என்ற பெயரில் வாகனங்களோடு ஊர்வலமாக அம்மன் காட்சி தருகின்றாள்.

நவராத்திரி விழா

புரட்டாசி மாத பூஜை வைப்பின் போது திருவனந்தபுரத்தில் உள்ள "கனககுன்று'அரண்மனையில் பூஜை வைக்க முன்னுதித்த நங்கை அம்மன் வழி நடை பாதையாக கோவில் பணியாளர்கள் அம்மனை தலையில் சுமந்து செல்கின்றனர். இன்னும் இந்த வழக்கம் இருந்து வருகின்றது. நவராத்திரி விழா முடிந்த உடன் அம்பாள் மீண்டும் சுசீந்திரம் திருக்கோவிலில் உள்ளே பாதுகாப்பாக வைக்கப்படுகிறது. இந்நிகழ்ச்சி பழைய கால பண்பாட்டின் அடையாளமாக இன்றும் கருதப்படுகிறது.

பிரதிஷ்டை

கொல்லம் ஆண்டு ஆவணி மாதம் 29/8 /1984 அன்று கருசர்க்கரை யோக மருந்தால் அம்பாள் வடிவமைக்கப்படுகின்றாள். மகிஷாசுரமர்த்தினி கோலத்தில் அம்மன் அருள் பாலிக்கின்றாள். செவ்வாய் வெள்ளி தினங்களில் பக்தர்கள் தங்கள் நைவேத்திய பிரசாதங்களை கோவிலுக்கு வழங்கி வழிபட்டு வருகின்றனர். அன்றைய தினம் அம்மனுக்கு அங்கியும், கவசமும் அணிவிக்கப்படுகிறது. மாதந்தோறும் கடைசி வெள்ளி என்று திருவிளக்கு வழிபாடு ஊர் பொது மக்களால் இன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. கோவில் விழாவின் போது வணிகர்கள் குறைந்த விலையில் பூஜைக்கான பொருட்களை வழங்கி வருகின்றனர்.

தேவியின் சில அற்புதங்கள்

பல வருடங்களாக குழந்தை இல்லாமல் இருக்கும் பெண்களுக்கு குழந்தை பாக்கியத்தை கொடுத்து அருள் பாலிக்கின்றாள். வேண்டுதல் நிறைவேறும் வகையில் காணிக்கையாக தொட்டிலும் பிள்ளையும்,

Vol. 20, No. 01 (October 2026) – Part II • ISSN 3049-0723 (Online) • ISSN 3107-7781 (Print)

குழந்தையுடன் கூடிய ஒரு மண்பாவையை செய்து காணிக்கையாக வைக்கின்றனர். வறுமை கோட்டுக்கு கீழே இருக்கின்றவர்களுக்கு செல்வம் பெற்ற வாழ்வும், பில்லி சூனியம், பிசாசு தொந்தரவு நோயிலிருந்து விடுபடவும் பக்தர்கள் பிரார்த்தனை செய்து பரிபூரண குணம் அடைகின்றனர். கோவில் பணியின் போது பலிபீடத்தில் விழுந்த இளைஞனை உயிர் பிழைக்க வைத்து நிகழ்வு இன்றும் கோயில் வளாகத்தில் பக்தர்களால் பதிவு செய்யப்படுகிறது.

முடிவுரை

ஸ்ரீ முன் உதித்த நங்கை அம்மன் கோவிலில் வழிபாட்டுக்காக வரும் மக்கள் தினந்தோறும் அதிகரித்து வருவதை நாம் காண முடிகிறது, கன்னியாகுமாரி மாவட்டத்தின் பண்பாட்டுக் கருவூலமாக கோவில் அமைப்பு அமைந்துள்ளது. சக்தி மிகுந்த அன்னையின் அருள் உலகில் வாழும் அனைத்து உயிர்களுக்கும் கிடைக்க வேண்டுகின்றேன்.

அடிக் குறிப்புகள்

1. கலைக்களஞ்சியம் ,தொகுதி 4 பக்கம் 304.

2. தமிழ் கோவில்களில் தமிழர் பண்பாடு தொ. மு .பாஸ்கர தொண்டைமான் பக்கம் 14.

துணைநூற் பட்டியல் (References)

1. தொ.மு.பாஸ்கர தொண்டைமான் தமிழ் கோவில்கள் தமிழர் பண்பாடு.
2. குன்றக்குடி அடிகளார் ஆலயங்கள் சமுதாய மையங்கள் சென்னை 1 9 8 7 முதல் பதிப்பு.
3. கா .சுப்பிரமணிய பிள்ளை தமிழர் சமயம் கழக வெளியீடு திருநெல்வேலி 19
4. மூன்றாம பதிப்பு Reference books
5. T.M.Baskaran tundaiman, Tamil Kovilkal Tamilar panpad.
6. Kuntakudi adigalar. Alayankal samuthaya myyangal Chennai 1987 first edition.
7. K Subramanya Pillai ,Tamilrar samayam kalaka veliyidhu Tirunelveli 1977 3rd edition.

© 2026 முனைவர். விஜய சோபா மோ. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..